**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2018**

**C021 இலக்கணம் – 1 (எழுத்து)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சார்பெழுத்தின் வகைகள் எத்தனை என்று நன்னூல் குறிப்பிடுகிறது?
2. போலியின் வகை கூறி அவற்றை எழுதுக.
3. சொல்லுக்கு இறுதியில் வரும் மெல்லின மெய் எழுத்துகள் யாவை?
4. அகச்சுட்டு என்றால் என்ன?
5. எழுத்துப் பிறப்பிற்கான காற்று உடலின் எப்பகுதியில் இருந்து எழுகிறது?
6. வல்லின மெய்கள் எங்கிருந்து பிறப்பதாகத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்?
7. நன்னூலார் குறிப்பிடும் ஓர் எழுத்து ஒரு மொழிகள் எத்தனை?
8. இடைநிலைகளின் வகைகளைக் குறிப்பிடுக.
9. செய்யுள் விகாரங்கள் உலக வழக்கில் வருமா?
10. நாற்கணம் என்பவை யாவை?
11. கிழக்குத் திசையைக் குறிக்க வழங்கும் சொல் யாது?
12. தமிழ் இலக்கண நூலார் குறிப்பிடும் உடம்படு மெய்கள் யாவை?
13. கமலக்கண் பிரித்து எழுதுக.
14. கண், கல் இச்சொற்கள் பேச்சில் எவ்வாறு ஒலிக்கின்றன?
15. ஏழாம் வேற்றுமைக்கு உரிய உருபு யாது?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. இன எழுத்துகள் என்றால் என்ன? விளக்குக.
2. எழுத்துப் பிறப்பில் தொல்காப்பியர், நன்னூலார் வேறுபடும் இடங்கள் யாவை?
3. பகாப்பதத்தின் வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக.
4. இடைநிலைகள் குறித்துச் சான்று தந்து விளக்குக.
5. அல்வழிப் புணர்ச்சி குறித்து எழுதுக.
6. குற்றியலுகரப் புணர்ச்சி குறித்து விளக்குக.
7. எண்ணுப் புணர்ச்சியினை எடுத்துரைக்க.
8. உருபுப் புணர்ச்சி என்றால் என்ன? விளக்குக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) போலி என்றால் என்ன? அதன் வகைகளைச் சான்றுகளுடன் விவரிக்க.

(அல்லது)

(ஆ) சார்பெழுத்துகளின் வகைகளை விளக்கியுரைக்க.

2. (அ) பதங்கள் குறித்தும் அதன் வகைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) உயிர் எழுத்துக்களின் பிறப்புகள் குறித்துக் கட்டுரை வரைக.

3. (அ) உயிர் ஈற்றுப் புணர்ச்சி குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) வல்லினம் மிகா இடங்களைச் சான்றுகளுடன் விளக்கிக் கட்டுரை வரைக.

❋ ❋ ❋